ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2243/14 - 2021 සැප්තැම්බර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.09.02

*2243/14 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 77

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, கீழே தரப்பட்டுள்ள அரிசி வகைகளுக்காக அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக இறக்குமதியாளர், வழங்குநர், உற்பத்தியாளர், விநியோகத்தர் அல்லது வியாபாரி எவரும் விற்பனை செய்யவோ, வழங்கவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு வெளிப்படுத்தவோ, விற்பனைக்காகக் காட்சிப்படுத்தவோ முடியாதென இத்தால் கட்டளையிடுகின்றது.

| வகைகள் | ஆகக்கூடுதலான சில்லறை விலை (ரூபா) |
|---|---|
| கீரி சம்பா | 125.00/கி. கிராம் |
| வெள்ளை/சிவப்பு சம்பா (வேகவைத்து/அவித்துப் பெறப்பட்டது) (சீரக சம்பா தவிர்ந்த) | 103.00/கி. கிராம் |
| வெள்ளை/சிவப்பு நாடு (வேகவைத்து/அவித்துப் பெறப்பட்டது) (மொட்டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி தவிர்ந்த) | 98.00/கி. கிராம் |
| வெள்ளை/சிவப்பு பச்சை அரிசி | 95.00/கி. கிராம் |


1A - G 34539 — 120 (2021/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது பின்வருமாறு கட்டளையிடுகின்றது. மேற்குறிப்பிட்ட அரிசி வகைகளின் இறக்குமதியாளர், வழங்குநர், உற்பத்தியாளர், விநியோகத்தர் அல்லது வியாபாரி எவரேனும் மேலே தரப்பட்டுள்ள அரிசி வகைகளை பொதி செய்வதாயின் அதற்காக பொதியொன்றுக்காக அல்லது பக்கற் ஒன்றுக்காக அரிசியின் நிறைக்கான விலையை தவிர மேலதிகமாகக் கட்டணங்களை அறவிட்டு விற்பனைக்கு வெளிப்படுத்த, வழங்க, விற்பனைக்கு விட/விற்பனைக்காக காட்சிப்படுத்த முடியாதென இத்தால் கட்டளையிடுகின்றது.

இக்கட்டளை, 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது 2020, மே மாதம் 28 ஆந் திகதிய 2177/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 66 ஆம் இலக்க கட்டளையை இக்கட்டளையினால் இரத்துச் செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
**தவிசாளர்.**

கொழும்பு,
2021, செத்தெம்பர் 02.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.